மாத காலம். ஆகவே, ஏப்ரலுக்குப் பிறகு, அறிவிக்கப்பட்ட தற்கு ஒரு மாத காலத்திற்குள் நிச்சயமாகத் தேர்தல்கள் நடக்கும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : கேள்விகள் 133 மற்றும் 134 ஆகியவை அமைச்சரின் வேண்டுகோளுக்கிணங்க தள்ளி வைக்கப்படுகின்றன.

Construction of a jetty at Rameswaram – Dhanushkodi.

*Q. No. 135 Thiru R. E. CHANDRAN JAYAPAL: Will the Hon. Minister for Transport be pleased to state:

a) Whether the Government have any proposal for the construction of a permanent pier or a jetty at Rameswaram and Dhanushkodi for the berthing of the ferry steamer plying between India and Sri Lankha; and

b] If so; the details thereof.

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : தலைவரவர்களே, 1970-ல் இந்திய அரசு அமைத்த குழு ஒன்று கப்பல்கள் நங்கூரம் இறக்கி நிற்பதற்கு வசதியாக, அவை தாங்கிப் பாலம் ஒன்றைக் கட்டுவதற்கு இராமேசுவரம் மிகவும் பொருத்தமான இடம் எனப் பரிந்துரைத்துள்ளது. அவ்வாறே, போக்குவரத்து நீராவிக் கப்பல்கள் நெடுகவும் நங்கூரம் இறக்கவும் அது தொடர்பான அனைத்துப் பணிகளை கவனிப்பதற்கும் இராமேசுவரத்தில் வலுவூட்டப்பெற்ற சிமிண்ட் கான்கிரீட் தோணித்துறை ஒன்றைக் கட்டுவதற்கு வகை செய்கின்ற செயல் திட்ட அறிக்கை ஒன்று தயாரிக்கப்பட்டு ஒப்புதல் பெறுவதற்சாக இந்திய அரசுக்கு அனுப்பப்பட்டுள்ளது. இச் செயல் திட்டத்திற்கான மதிப்பீட்டுச் செலவு ஒரு கோடியே 80 இலட்சமாகும். இத் திட்டத்திற்கான ஒப்புதல் இந்திய அரசிடமிருந்து எதிர்பார்க்கப்படுகிறது.

திரு. கூதக்குடி ச. சண்முகம் : தலைவரவர்களே, 1970 லேயிருந்து இப்பொழுது பத்தாண்டுகள் ஆகின்றது. கடந்த கால அரசுகளைப் பற்றி, நிறைவேற்றுவதிலே தாமதம் இருந்தாலும், மத்திய அரசிடமிருந்து சீக்கிரமாக இதற்கான அனுமதியைப் பெற்று இந்த அரசு இதை உடனடியாக நிறைவேற்றுகின்ற முயற்சியில் ஈடுபடுமா ?

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : தலைவரவர்களே, இந்த அரசு பொறுப்பேற்ற பிறகு பலமுறை மைய அரசுக்கு நாம் நினைவூட்டியதோடு அல்லாமல், மைய அமைச்சரைச் சந்தித்து இதுபற்றி நேரிலேயே நான் வலியுறுத்தியிருக்கிறேன். இது குறித்து நான் மைய அமைச்சரை மீண்டும் சந்தித்து வலியுறுத்தி விரைவில் இதை நடைமுறைப்படுத்த நடவடிக்கை எடுப்பேன்.